**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW2 Examined as PW4 (Victim)**

| | | | |
|---|---|---|---|
| Name | ஸ்ரீகாந்த் | Caste: | |
| Father's name | பெருமாள் | Calling: | 12 ஆம் வகுப்பு |
| Village | மனவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 17 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09/05/2023.
எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை</u>

1. எனது பெயர் ஸ்ரீகாந்த், ஸ்ரீதர் என்பது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 நமச்சிவாயம் எனது சித்தப்பா ஆவார், அ.சா.2 பெருமாள் எனது தந்தை, இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். 27.03.2021 ஆம் தேதியன்று மாலை 4.30 மணியளவில் நான் வயலில் உழவு ஓட்டிக்கொண்டிருந்தேன். என் அப்பா வயலில் புல், பூண்டுகளை பிடுங்கி கொண்டிருந்தார்.

2. அப்போது சின்னு, கருப்பையா ஆகிய இருவரும் லோகி, உங்க அம்மா உன்ன வெட்டிருவேண்டா, என்று வந்தார்கள். ஆளுக்கொரு மண்வெட்டி பிடியை எடுத்துக் கொண்டு வந்தார்கள். எனக்கு பயம் வந்தவுடன் நான் வண்டியை நிறுத்தி விட்டேன்., என் அப்பா பயந்து நகர்ந்து சென்றார். அவரை பிடித்து ஓங்கி சின்னு, கருப்பையா ஆகிய இருவரும் மண்வெட்டி பிடியால் என் அப்பாவின் முன் நெற்றியில் அடித்தார்கள். நான் என் அப்பாவை தூக்க சென்ற போது என்னையும் முதுகில் மண்வெட்டி பிடியால் அடித்து விட்டார்கள். ஒரு நிமிடம் என்ன நடந்தது என்று தெரியவில்லை, எங்களுக்கு உயிர் பயம் வந்து விட்டது.

3. என் சித்தப்பா பக்கத்து வயலில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார். தூக்க வரும் போது என் சித்தப்பாவையும் மண்வெட்டி பிடியால் இருவரும் அடித்து விட்டார்கள். அப்போது கருப்பையா நான் வக்கில் உங்களை என்ன வேண்டும்னாலும் செய்வேன் என்றும் கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டினார். எங்களுக்கு எங்க சொந்த வயலுக்கு செல்ல பயமாக உள்ளது. அடிக்கடி அவர் எங்களை மிரட்டி வருகிறார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவரிடம் சென்று சிகிச்சை மேற்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.3 செல்வி எனது அம்மா என்றால் சரிதான். பட்டியல் சாட்சி விஜயா, சங்குவலை, மாலதி ஆகியோர் எனது ஊர்க்காரர்கள். எங்களுக்கும் கருப்பையா குடும்பத்திற்கும் நீண்ட நாள்களாக சொத்து சம்மந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் உழவு நடத்திக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். 10 கி.மீ. வேகத்தில் நான் வாகனத்தை ஓட்டி வந்தேன். எனது தந்தைக்கும் எதிரி குடும்பத்திற்கும் சண்டை நடந்தது, எனக்கு சத்தம் கேட்டது என்றால் ட்ரக்கை நிப்பாட்டியவுடன் சண்டை நடந்தது. என் அப்பாவிற்கும் கருப்பையா குடும்பத்திற்கும் சண்டை நடந்த சத்தம் கேட்டதா இல்லையா என்றால் நான் அங்கு தான் 10 கி.மீ. தொலைவில் நின்று கொண்டிருந்தேன்.

2. என் அப்பா நீதிமன்ற சாட்சியத்தில் என் மகன் ட்ரக்கை நிறுத்தவில்லை என்று சொல்லியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா அடித்தவுடன் மயங்கி விட்டார். நான் எங்க அப்பா, எங்க சித்தப்பா, என் அம்மா, என் சகோதரர் ஆகியோர் மீதும் என் மீதும் சின்னு கருப்பையா ஆகியோரை அடித்து என் மீது வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் நான் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன் என்றால் அடித்தவுடன் மயக்கம் வந்து விட்டு விட்டது. மயக்கம் போட்டு விழுந்தவுடன் என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றால் சரிதான், ஆம்புலன்ஸ் ஏறும் போது எதிரிகள் என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள்.
3. சம்பவ நேரத்தில் என் தந்தை எந்த திசையில் ஓடினார் என்றால் வடக்கு திசையில் ஓடினார். எனக்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்களை என் தந்தை சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.
4. நான் தான் வழக்கறிஞர் கருப்பையாவை இரண்டு மூன்று முறை வண்டி ஏற்றி கொன்று விடுவேன் என்று மிரட்டி அவர் என் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் அவர் தான் வக்கீல் என்பதால் என்னை மிரட்டி வருகிறார். எதிரிகள் எங்கள் மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்கதாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து என் தந்தைக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்ன தேதி, என்ன மாதம், என்ன பெயர் கொண்ட போலிஸ் அதிகாரி என்னை விசாத்தார் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW5 Examined as PW5 (Eye witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | விஜயா | Caste: | |
| Husband name | பழனிச்சாமி | Calling: | கூலித்தொழில் |
| Village | மனவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 45 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09/05/2023.
எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை</u>

1. அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகளை எனக்கு தெரியும், அவர்கள் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். எதிரிகள் எங்களுக்கு பக்கத்து ஊர். 27.03.2021 தேதியன்று மாலை 4.30 மணியளவில் நாங்கள் கடலை ஆய்ந்து கொண்டிருந்தோம், நாங்கள் கடலை ஆய்ந்து கொண்டிருந்த இடத்திற்கு முன்னால் சண்டை நடந்துது, சத்தமாக இருந்தது. நான் போய் பார்த்த போது ஸ்ரீகாந்தும் அவரது அப்பாவும் கீழே விழுந்து கிடந்தார்கள். நான் பதட்டத்தில் அழுது விட்டேன். சின்னுவும் கருப்பையாவும் மண்வெட்டி பிடியை வைத்து கொண்டு இருந்தார்கள். கருப்பையா நான் நின்று கொண்டிருந்த போது என்னைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்று சொன்னார். பெருமாளுக்கு புருவத்தில் அடி பட்டு இருந்தது. ஸ்ரீகாந்திற்கு இடுப்பில் அடி பட்டு இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா. 1 நமச்சிவாயம் எனக்கு என்ன உறவு என்றால், உறவெல்லாம் கிடையாது ஊர்க்காரர்கள். நமச்சிவாயத்தின் அம்மாவும் என் அம்மாவும் அக்கா, தங்கை என்றால் சரியல்ல, எனக்கு அவர் உறவு கிடையாது. நானும் நமச்சிவாயமும் ஒரே ஜாதி என்றால் சரிதான். இரண்டு வயல் என்பது 150 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது, பக்கத்தில் தான் இருந்தது. இரண்டு வயல் என்பது கந்தர்வக்கோட்டை நீதிமன்றத்தில் இருந்து கந்தர்வக்கோட்டை பேருந்து நிறுத்தம் வரை என்றால் சரியல்ல, அவ்வளவு தொலைவு இருக்காது பக்கம் தான். சம்பவம் முடிந்த பின்னர் தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான், சத்தம் கேட்டு தான் சென்றேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, என்னையும் விசாரித்தார்கள். எந்த போலிசார் என்னை விசாரித்தார் என்று சொல்ல முடியாது

என்றால் சரிதான். வாதி என்னுடைய ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW6 Examined as PW6 (Eye witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | சங்குவளை | Caste: | |
| Father's name | கருப்பையா | Calling: | கூலி வேலை |
| Village | மனவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 53 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09/05/2023.
எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
முதல் விசாரணை

1. நான் தற்போது மனவாத்திப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். 2021 ஆம் வருடம் 3 ஆம் மாதம் 27 ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் பக்கத்து வயலில் கடலை அறுவடை செய்து கொண்டிருந்தோம். கருப்பையா, சின்னுவிற்கும், பெருமாள், ஸ்ரீகாந்திற்கும் இடையே பிரச்சினை நடந்தது. அதில் கருப்பையாவும் சின்னுவும் கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார்கள். கருப்பையாவும் சின்னுவும் மண்வெட்டி பிடியால் பெருமாளையும் படிக்கும் பிள்ளையான ஸ்ரீகாந்தையும் அடித்தார்கள். நான் அழுது கொண்டு சென்றேன். அதில் பெருமாளுக்கு கண்புருவத்திலும் ஸ்ரீகாந்திற்கு இடுப்பிலும் அடிபட்டு பேச்சு மூச்சு இன்றி கிடந்தார். அவருடைய சித்தப்பா நமச்சிவாயம் சிகிச்சைக்காக மருத்துவமனை அழைத்து சென்றார். கருப்பையாவும் சின்னுவும் பக்கத்து ஊர்க்காரர்கள், அவர்களை எனக்கு தெரியும், அவர்களை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

**1.** அ.சா.1 நமச்சிவாயம் எனக்கு கொழுந்தன் மகன், நெருக்கமான உறவு கிடையாது, என் ஊரைச் சேர்ந்தவர். என் கணவர் ஆடு, மாடு மேய்ப்பார். எங்கள் ஊரில் பொதுவாக கூலி வேலைக்கு காலை 9.00 மணிக்கு சென்று மாலை 2.30 மணிக்கு திரும்புவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கும் நான் கடலை அறுவடை செய்த வயலுக்கும் இடையே 150 மீட்டர் தொலைவு இருக்குமா என்றால் பக்கத்தில் தான் இருந்தது. 50 மீட்டர் தொலைவு இருக்குமா என்றால் அவ்வளவு இருக்காது, பக்கத்து பக்கத்து கொல்லை தான். இரண்டு குடும்பமும் சண்டை போட்டு கொண்டிருந்த சத்தம் எனக்கு கேட்டதா என்றால் கேட்டது. சத்தம் கேட்டு தான் சம்பவ இடம் சென்றோம் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்ன தேதி, என்ன மாதம், என்ன பெயர் கொண்ட

போலிசார் என்னை விசாரித்தார் என்றால் இரண்டு, மூன்று போலிசார் வந்தார்கள், ஒரு போலிசார் என்னை விசாரித்தார். வழக்கின் சம்பவம் எனக்கு தெரியாது என்றாலும் வாதி எனக்கு உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வாதி மற்றும் காயம் பட்டவர்கள் கருப்பையாவையும் சின்னுவையும் அடித்து அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW7 Examined as PW 7 (Eye witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | மாலதி | Caste: | |
| Husband name | சத்தியமூர்த்தி | Calling: | கூலி வேலை |
| Village | மனவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 45 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09/05/2023.
எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது மனவாத்திப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். 27.03.2021 தேதியன்று மாலை 4.30 மணியளவில் பக்கத்து கொல்லையில் நான் கடலை ஆய்ந்து கொண்டிருந்தேன். அப்போது பெருமாளையும், ஸ்ரீகாந்தையும் கருப்பையாவும் சின்னுவும் மண்வெட்டி பிடியால் அடித்து பெருமாளுக்கு கண் புருவத்திலும் ஸ்ரீகாந்திற்கு இடுப்பிலும் காயம் பட்டு மயங்கி கிடந்தார்கள். மண்வெட்டி பிடியோடு கருப்பையா நின்றார். அவர்கள் கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். பின்னர் என்னைக்கு இருந்தாலும் அடித்து கொல்லாமல் விட மாட்டோம் என்று சொன்னார்கள். 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து சிகிச்சைக்காக அவர்கள் சென்றார்கள். 108 -ல் ஏற்றும் போது என்னைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்றும் நான் வக்கில் என்பதால் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1.** 108 ஆம்புலன்சில் ஏற்றிய போது அவர்கள் கொலை மிரட்டல் விடுத்ததை போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் பதட்டத்தில் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை யார் சொல்லியது என்றால் யாரும் சொல்லவில்லை நான் நேரடியாக பார்த்தேன். அ.சா.1 நமச்சிவாயம் எனக்கு என்ன உறவு முறை என்றால் ஊர்க்காரர். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பட்டா இடம் எனக்கு இல்லை என்றால் சரிதான் நான் வேலைக்கு சென்றிருந்தேன். சம்பவ இடம் கருப்பையா இடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த வயலுக்கு வேலைக்கு சென்றேன் என்றால் கூத்தாச்சிபட்டியை சேர்ந்த வீரன் கொல்லைக்கும் வேலைக்கு சென்றேன், அந்த வயலுக்கும் சம்பவ இடத்திற்கும் 50 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல, பக்கத்து கொல்லை தான். வீரன் கொல்லைக்கு பக்கத்து கொல்லை யார் கொல்லை என்றால் பெருமாள் கொல்லை. இரண்டு

கொல்லைக்கும் இடையே வரப்பு இல்லை என்றால் சரியல்ல, வரப்பு உள்ளது. எதிரிகுடும்பத்திற்கும் நமச்சிவாயத்திற்கும் இடையே சண்டை நடந்த உடன் சத்தம் கேட்டு நாங்கள் அங்கு சென்றோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று சின்னுவிற்கும் கருப்பையாவிற்கும் காயம் பட்டு அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அலறல் சத்தம் கேட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் போலிசார் வீட்டுக்கு வந்து விசாரித்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.